# தூய ஆரோக்கிய அன்னை திருவிழா



09 DAY

## தூய ஆரோக்கிய அன்னை நோயாளிகளின் நற்சுகம்...

# தூய ஆரோக்கிய அன்னை நோயாளிகளின் நற்சுகம்

ஆண்டவர் சொன்னவாக்கு நிறைவேறும் என
விசுவசித்த கன்னிமரியே நீ பேறுபெற்றவர்

## அன்பில் இணைவோம்

குரு: ஆண்டவருடைய மீட்பை அறிவியுங்கள்
அவருடைய அரும்பெரும்செயல்களை எடுத்தியம்புங்கள்
Priest : Announce the salvation of the Lord
Proclaim his works among the people

மக் என்றென்றும் உள்ளது அவரது இரக்கம்
People: His mercy is everlasting

குரு: இறைவார்த்தையால் இவ்வுலகை ஒளிர்வித்த
இறைவனை நாம் வாழ்த்துவோம்.
Priest : Bless the Lord our God
Who sent the Word of life into the World

மக் ஆண்டவர் தம் செயல்களில் நீதியுள்ளவர்
அவருடைய செயல்கள் புனிதமானவை
அனைத்துலகே ஆண்டவரைப் புகழ்வாயாக
உயிருள்ள அனைத்தும் அவரின் திருநாமத்தை வாழ்த்துவதாக
People: Just is the Lord in all His ways
And Holy in all His works
Let every creature praise Him
and all living beings bless his name

## புகழ்வோம் நம் அன்னையை

தாயின் மடிதான் உலகம் – அவள்
தாளைப் பணிந்திடுவோம்
அவள் சேயின் வழிதான் மோட்சம்–நம்
இயேசுவைத் தொழுதிடுவோம்
பிள்ளை என்றும் வாழ நல்லது எல்லாம் தருவாள் – அவள்
உள்ளம் என்றும் மகிழ உண்மை வழியில் நாம் நடப்போம்.
அன்னை மரியாள் உள்ளம் ஆழம் காணாக் கடலாகும்
அன்பு கருணை உருவாய் ஆண்டவன் தந்த அருள்பொருளாம்

வங்கக் கடல் கரை ஓரம் வேளாங்கண்ணியில் வாழும்
தங்க நிலாவின் ஒளியால் தாரகை சூடும் ஆரோக்கிய மாதாவே

## திருப்பாடலில் செபிப்போம் .திபா. 103:1—22

1என் உயிரே! ஆண்டவரைப் போற்றிடு!
என் முழு உளமே! அவரது திருப்பெயரை ஏத்திடு!
2என் உயிரே! ஆண்டவரைப் போற்றிடு!
அவருடைய கனிவான செயல்கள் அனைத்தையும் மறவாதே!

3அவர் உன் குற்றங்களையெல்லாம் மன்னிக்கின்றார்:
உன் நோய்களையெல்லாம் குணமாக்குகின்றார்.
4அவர் உன் உயிரைப் படுகுழியினின்று மீட்கின்றார்:
அவர் உனக்குப் பேரன்பையும் இரக்கத்தையும் மணிமுடியாகச் சூட்டுகின்றார்.

5அவர் உன் வாழ்நாளை நலன்களால் நிறைவுறச் செய்கின்றார்:
உன் இளமை கழுகின் இளமையெனப் புதிதாய்ப் பொலிவுறும்.
6ஆண்டவரின் செயல்கள் நீதியானவை:
ஒடுக்கப்பட்டோர் அனைவருக்கும் அவர் உரிமைகளை வழங்குகின்றார்.

7அவர் தம் வழிகளை மோசேக்கு வெளிப்படுத்தினார்:
அவர் தம் செயல்களை இஸ்ரயேல் மக்கள் காணும்படி செய்தார்.
8ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர்:
நீடிய பொறுமையும் பேரன்பும் உள்ளவர்.

9அவர் எப்பொழுதும் கடிந்து கொள்பவரல்லர்.
10அவர் நம் பாவங்களுக்க ஏற்ப நம்மை நடத்துவதில்லை:
நம் குற்றங்களுக்க ஏற்ப நம்மைத் தண்டிப்பதில்லை.
11அவர் தமக்கு அஞ்சுவோர்க்குக் காட்டும் பேரன்பு
மண்ணின்று விண்ணளவுபோன்று உயர்ந்தது.

12மேற்கினின்று கிழக்கு எத்துணைத் தொலைவிலுள்ளதோ,
அத்துணைத் தொலைவிற்கு நம் குற்றங்களை
நம்மிடமிருந்து அவர் அகற்றுகின்றார்.
13தந்தை தம் பிள்ளைகள்மீது இரக்கம் காட்டுவதுபோல்
ஆண்டவர் தமக்கு அஞ்சுவோர் மீது இரங்குகிறார்.

14ஆவர் நமது உருவத்தை அறிவார்:
நாம் தூசி என்பது அவர் நினைவிலுள்ளது.
15மனிதரின் வாழ்நாள் புல்லைப் போன்றது:
வயல்வெளிப் பூ வென அவர்கள் மலர்கின்றார்கள்.

16அதன்மீது காற்றடித்ததும் அது இல்லாமல் போகின்றது:
அது இருந்த இடமே தெரியாமல் போகின்றது.
17ஆண்டவரது பேரன்போ அவருக்க அஞ்சுவோர்மீது
என்றென்றும் இருக்கும்:

அவரது நீதியோ அவர்களின் பிள்ளைகளின் பிள்ளைகள்மீதும் இருக்கும்.

18 அவருடைய உடன்படிக்கையைக் கடைப்பிடித்து
அவரது கட்டளையின்படி நடப்பதில்
கருத்தாய் இருப்போர்க்கு அது நிலைக்கும்.
19 ஆண்டவர் தமது அரியணையை விண்ணகத்தில் நிலைநிறுத்தியுள்ளார்;
அவரது அரசு அனைத்தின்மீதும் பரவியுள்ளது.

20 அவர்தம் சொற்கேட்டு நடக்கும் வலிமைமிக்கோரே!
ஆண்டவரின் தூதர்களே! அவரைப் போற்றுங்கள்.
21 ஆண்டவரின் படைகளே! அவர் திருவுளப்படி
நடக்கும் அவர்தம் பணியாளரே! அவரைப் போற்றுங்கள்.

22 ஆண்டவரின் ஆட்சித் தலத்தில் வாழும்
அனைத்துப் படைப்புகளே! ஆண்டவரைப் போற்றுங்கள்!
என்னுயிரே! ஆண்டவரைப் போற்றிடு!

பிதாவுக்கும் சுதனுக்கும் தூய ஆவிக்கும் ...

## Psalm - 103:1-22

1 Bless the Lord, O my soul,
and all that is within me,
bless his holy name.
2 Bless the Lord, O my soul,
and do not forget all his benefits—
3 who forgives all your iniquity,
who heals all your diseases,
4 who redeems your life from the Pit,
who crowns you with steadfast love and mercy,
5 who satisfies you with good as long as you live[a]
so that your youth is renewed like the eagle's.
6 The Lord works vindication
and justice for all who are oppressed.
7 He made known his ways to Moses,
his acts to the people of Israel.
8 The Lord is merciful and gracious,
slow to anger and abounding in steadfast love.
9 He will not always accuse,
nor will he keep his anger forever.
10 He does not deal with us according to our sins,
nor repay us according to our iniquities.
11 For as the heavens are high above the earth,
so great is his steadfast love toward those who fear him;
12 as far as the east is from the west,
so far he removes our transgressions from us.
13 As a father has compassion for his children,

so the LORD has compassion for those who fear him.
14 For he knows how we were made;
he remembers that we are dust.
15 As for mortals, their days are like grass;
they flourish like a flower of the field;
16 for the wind passes over it, and it is gone,
and its place knows it no more.
17 But the steadfast love of the LORD is from everlasting to everlasting
on those who fear him,
and his righteousness to children’s children,
18 to those who keep his covenant
and remember to do his commandments.
19 The LORD has established his throne in the heavens,
and his kingdom rules over all.
20 Bless the LORD, O you his angels,
you mighty ones who do his bidding,
obedient to his spoken word.
21 Bless the LORD, all his hosts,
his ministers that do his will.
22 Bless the LORD, all his works,
in all places of his dominion.
Bless the LORD, O my soul.
Glory be to God ...

## செவிமடுப்போம் இறைவார்த்தைக்கு

**புனித யோவான் எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்:** லூக். 1:39-56

39 அதன்பின் மரியா புறப்பட்டு யூ தேய மலைநாட்டிலுள்ள ஓர் ஊருக்கு விரைந்து சென்றார். 40 அவர்
செக்கரியாவின் வீட்டை அடைந்து எலிசபெத்தை வாழ்த்தினார். 41 மரியாவின் வாழ்த்தை
எலிசபெத்து கேட்டபொழுது அவர் வயிற்றிலிருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளிற்று.
எலிசபெத்து தூய ஆவியால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டார். 42 அப்போது அவர் உரத்த
குரலில், ̇பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர்: உம் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசி பெற்றதே!
43 ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்? 44 உம் வாழ்த்துரை என் காதில் விழுந்ததும் என்
வயிற்றினுள்ளே குழந்தை பேருவகையால் துள்ளிற்று. 45 ஆண்டவர் உமக்குச் சொன்னவை
நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறுபெற்றவர் ̇ என்றார். 46 அதைக் கேட்ட மரியா பின்வருமாறு
கூறினார்: 47 ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப் படுத்துகின்றது. என் மீட்பராம்
கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கின்றது. 48 ஏனெனில் அவர் தம் அடிமையின்
தாழ்நிலையைக் கண்ணோக்கினார். இதுமுதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப்
பேறுபெற்றவர் என்பர். 49 ஏனெனில் வல்லவராம் கடவுள் எனக்கு அரும்பெரும் செயல்கள்
செய்துள்ளார். தூயவர் என்பதே அவரது பெயர். 50 அவருக்கு அஞ்சி நடப்போருக்குத் தலைமுறை
தலைமுறையாய் அவர் இரக்கம் காட்டி வருகிறார். 51 அவர் தம் தோள் வலிமையைக் காட்டியுள்ளார்:
உள்ளத்தில் செருக்குடன் சிந்திப்போரைச் சிதறடித்து வருகிறார். 52 வலியோரை அரியணையினின்று
தூக்கி எறிந்துள்ளார்: தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறார். 53 பசித்தோரை நலன்களால்
நிரப்பியுள்ளார்: செல்வரை வெறுங்கையராய் அனுப்பிவிடுவார். 54 மூதாதையருக்கு உரைத்தபடியே
அவர் ஆபிரகாமையும் அவர்தம் வழி மரபினரையும் என்றென்றும் இரக்கத்தோடு நினைவில்
கொண்டுள்ளார். 55 தம் ஊழியராகிய இஸ்ரயேலுக்குத் துணையாக இருந்து வருகிறார் ̇. 56 மரியா

ஏறக்குறைய மூன்று மாதம் எலிசபெத்தோடு தங்கியிருந்த பின்பு தம் வீடு திரும்பினார்.

இது கிறிஸ்துவின் வாழ்வு தரும் நற்செய்தி
கிறிஸ்துவே உமக்குப் புகழ்..

**Luke: 1:39-56**

39 In those days Mary set out and went with haste to a Judean town in the hill country, 40 where
she entered the house of Zechariah and greeted Elizabeth. 41 When Elizabeth heard Mary’s
greeting, the child leaped in her womb. And Elizabeth was filled with the Holy Spirit 42 and
exclaimed with a loud cry, “Blessed are you among women, and blessed is the fruit of your
womb. 43 And why has this happened to me, that the mother of my Lord comes to me? 44 For
as soon as I heard the sound of your greeting, the child in my womb leaped for joy. 45 And
blessed is she who believed that there would be[a] a fulfillment of what was spoken to her by
the Lord.”
46 And Mary[b] said, “My soul magnifies the Lord,
47 and my spirit rejoices in God my Savior,
48 for he has looked with favor on the lowliness of his servant.
Surely, from now on all generations will call me blessed;
49 for the Mighty One has done great things for me,
and holy is his name.
50 His mercy is for those who fear him
from generation to generation.
51 He has shown strength with his arm;
he has scattered the proud in the thoughts of their hearts.
52 He has brought down the powerful from their thrones,
and lifted up the lowly;
53 he has filled the hungry with good things,
and sent the rich away empty.
54 He has helped his servant Israel,
in remembrance of his mercy,
55 according to the promise he made to our ancestors,
to Abraham and to his descendants forever.” 56 And Mary remained with her about three
months and then returned to her home.

## இறை வார்த்தையை உள்ளத்தில் இருத்தி சிந்திப்போம்...

## நம் உள்ளத்தில் எழும் மன்றாட்டுக்களை நம் ஆரோக்கிய அன்னை வழியில் அன்பர் இயேசுவிடம் சமர்ப்பிப்போம்.

*1. அன்னையாம் திருச்சபைக்காக மன்றாடுவோம்: தாய் திருச்சபையை வழிநடத்தும் நமது திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள் குருக்கள் மற்றும் இறைமக்கள் நமது அன்னை மரியாவைப் போல ஆவியின் வரங்களால் நிரப்பட்டு ஒற்றுமையின் கருவிகளாகத் திகழ்ந்திட ஆண்டவரே அன்னை மரியா வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.*

**இறைவா! புனித ஆரோக்கிய அன்னை வழியாக நாங்கள் கேட்கும் மன்றாட்டுக்குச் செவிசாய்த்தருளும்.**

*2. நமது தளத்திருச்சபைக்காக மன்றாடுவோம்.: நமது தலைமை ஆயர் மற்றும் இனையாயர்கள் நமது உயர் மறைமாவட்டதில் உள்ளஒவ்வொரு*

குடும்பங்களிலும் இறைவார்த்தையின் ஒளி மகிழ்சியிலும் மனநிறைவிலும் ஒற்றுமையிலும் வாழ்ந்திட வளர்ந்திட ஆண்டவரே அன்னயைாம் மரியாள் வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

**இறைவா! புனித ஆரோக்கிய அன்னை வழியாக நாங்கள் கேட்கும் மன்றாட்டுக்குச் செவிசாய்த்தருளும்.**

3. அமெரிக்கா வாழ் இந்தியர்களுக்காக அவர்களின் குடும்பங்களுக்காக மன்றாடுவோம். அன்பிலும் மகிழ்ச்சியிலும் ஒன்றுபட்டு வாழ்ந்திடவும் ஒரு-வரையொருவர் மன்னித்து ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தை தந்திட ஆண்டவரே அன்னை மரியாவழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

**இறைவா! புனித ஆரோக்கிய அன்னை வழியாக நாங்கள் கேட்கும் மன்றாட்டுக்குச் செவிசாய்த்தருளும்.**

4. புனித ஆரோக்கிய அன்னையின் பத்தர்கள் அனைவருக்காகவும் மன்றாடுவோம்: அன்னையைப்போல பிறரன்பிலும் இறையன்பிலும் நாளுக்கு நாள் வாழ்ந்து நற்செய்திக்குச் சான்றுபகர்ந்திட அருள்வேண்டி ஆண்டவரே அன்னை மரியா வழியாக ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

**இறைவா! புனித ஆரோக்கிய அன்னை வழியாக நாங்கள் கேட்கும் மன்றாட்டுக்குச் செவிசாய்த்தருளும்.**

5. நமது தனிப்பட்ட தேவைகளுக்காக ....

.....ஆண்டவரே அன்னை மரியா வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

**இறைவா! புனித ஆரோக்கிய அன்னை வழியாக நாங்கள் கேட்கும் மன்றாட்டுக்குச் செவிசாய்த்தருளும்.**

# புனித ஆரோக்கிய அன்னை நவநாள் செபம்

மகா பரிசுத்த கன்னிகையே! இயேசுவின் தாயாராயிருக்குமாறு
பரிசுத்த மூவொரு கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்ட தூய கன்னி மரியே!
கடவுளுடைய திருப்புதல்வர் உமது திருஉதரத்தில்
மனிதராக அவதரித்தபோதும் ஒன்பது மாதமளவாக
அவரை உமது மாசணுகாத கருவில் தாங்கியபோதும்
நீர் அடைந்த பேரின்பத்தை உமது ஊழியர்களாகிய நாங்கள்
நினைவுகூர அருள்கூர்ந்தமைக்கு உமக்கு நன்றிகூருகின்றோம்.
எமது அன்பினாலும் தூய வாழ்வினாலும்
நீர் அடைந்த பேரின்பத்தை நாங்களும் அடைய
எங்களுக்காக மன்றாடும் தாயே!
துன்பப்படுவோரின் தாயே இரக்கமிக்க அன்னையே!

நீா் அனுபவித்த பேரின்பத்தைக் கொண்டாடுகின்றவா்களுக்கு
நீா் வாக்களித்துள்ள விசேச உதவியையும் பாதுகாப்பையும்
எங்களுக்கு இவ்வேளையில் பெற்றுத்தந்தருளும்.
கேளுங்கள் கொடுக்கப்படும் என்ற உம் திருமகன் இயேசுகிறிஸ்துவின்
வல்லமைமிக்க வார்த்தையில் நம்பிக்கைகொண்டு
உமது வல்லமைமிக்க மன்றாட்டுகளில் நம்பிக்கைகொண்டு
இந்த நவநாட்களில் நாங்கள் செய்யும் விண்ணப்பங்களை
கடவுளுடைய திருவுளத்திற்கு மாறாயிருந்தால்
எமக்கு எவ்வரம் மிகவும் தேவையோ அவற்றை பெற்றுத்தந்தருளும்.

(இங்கு மன்றாட்டுக்களை நினைவிற்கொள்ளவும்)

இறைவனின் தாயே! இப்பொழுது உமக்கு வணக்கமாக
நாங்கள் செய்யும் இந்த நவநாளை உம்மில்கொண்டிருக்கும்
ஆழ்ந்த நம்பிக்கையின்பொருட்டு செய்கிறோம்.
இயேசு மனிதராக அவதரித்தபோது
உமது திருவுளம் அடைந்த தெய்வீக மகிழ்ச்சியை
அதற்கு வணக்கமாக நாங்கள் செய்யும் இந்நவநாள் பக்தி முயற்சியையும்
இப்பொழுது நாங்கள் சொல்லப்போகும்
அருள் நிறைந்த செபத்தையும் அன்போடு ஏற்றுக்கொள்ளும் தாயே!

(9 முறை அருள் நிறைந்த செபம்)

நீா் அணிந்திருக்கும் மணிமுடியில்
எம் செபங்கள் அத்தனையும் விண்மீண்களென துலங்குமென
ஆழ்ந்த நம்பிக்கைகொள்கின்றென்.
வருந்துவோருக்கு ஆறுதலே!
எம் வேளைநகா் ஆரோக்கியத் தாயே!
நாங்கள் உம்மிடம் மன்றாடும் விண்ணப்பங்கள் நிறைவேறுமாறு
உமக்கு வணக்கமாக இதுவரை புனிதா்களால் செய்யப்பட்ட
எல்லா அரும்பெரும் நிகழ்வுகளையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன்.
உமது திருமகனும் எங்கள் ஆண்டவருமான
இயேசு கிறிஸ்துவின் திருஇருதயத்தில் பொங்கி வழியும் பேரன்பையும்
அதுபோன்ற உமது அன்பையும் நினைவிற்கொண்டு
உமது அடியோர்களாகிய எங்களது செபத்தை ஏற்று
எம் மன்றாட்டுகளை அடைந்து தந்தருளும் அம்மா. ஆமென்.

# ஆண்டவரில் அக்களிக்கும் நம் ஆரோக்கிய அன்னையை வாழ்த்துவோம்.

ஆரோக்கிய மாதாவே –உமது
புகழ்பாடித் துதித்திடுவோம்
எந்நாளும் பாடித்துதித்திடுவோம்.

அலைகள்மோதிடும் கடற்கரைதன்னில்
வசித்திட ஆசை வைத்தாயே

புலவகை கலைகளும் பாரினில் துலங்கிட
அனைவருக்கும் துணைபுரிந்தாயே - 2

தேன் கமழும் சோலை சூழ்ந்து விளங்கும்
வேளாங்கண்ணியில் அமர்ந்தாயே
வானகமும் இந்த வையகமும்
செழித்தோங்கிட அருள் புரிந்தாயே

## செப்போமாக

ஆண்டவரே பரிசுத்த தந்தையே
உம் திரு மகனின் துன்பத்தில் பங்கேற்கும்
பேற்றினை தூய கன்னி மரியாளுக்கு தந்து,
அவளின் பாதுகாவலை வேண்டிநிற்போர்க்கும்
அவள் ஒரு நம்பிக்கை நட்சத்திரமாகவும்
புது வாழ்வின் வாக்குருதியாகவும்
திகழ்ந்திட திருவுளமானீர்
அவளை நோக்கி மன்றாடும் அனைவருக்கும்
உமது திட்டத்தை முழுமையாக ஏற்றுக் கொண்ட
முன்மாதிரியாக திகழ்கின்றாள்.
மேலும் எங்கள் மீது கொண்ட அன்பால் எங்களது பலவீனத்தையும், துன்பத்தையும் சுமந்த
இயேசுவை பின்பற்றுவதிலும் முன்மாதிரியாக திகழ்ந்தாள்.
நாங்களும் அவரின் முன் மாதிரியைப் பின்பற்றி
கிறிஸ்துவின் குணமளிக்கும் ஆற்றலை முழுமையாக எங்கள் வாழ்வில்
கண்டுபாவித்து துண்புறும் எம் சகோதர சகோதரிகளுக்கு
துணைநிற்க எமக்கு அருள்வீராக
எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து விழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

